**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 44/2018**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | மணியம்மாள் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 22.01.2026.

**3 மற்றும் 4ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. எதற்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால் என் கணவரின் வாரிசு சான்று கேட்டு வழக்கு போட்டுள்ளேன். நவகோட்டி எப்போது காலமானார் என்றால் 18.10.2016–ல் காலமானார். அவரது இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். 18.10.2016 நவகோட்டி காலமானார் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாவாவில் 17.03.1985–ல் காலமானதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. எனது தாவாவில் 17.03.1985–ல் நவகோட்டி காலமானதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் தவறு தான். நவகோட்டியின் வாரிசு சான்று கேட்டு வட்டாட்சியரிடம் நான் தான் மனு கொடுத்தேன். எந்த காரணத்திற்காக மனு நிராகரிக்கப்பட்டது என்றால் இரண்டு மனைவி என்ற காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டது, முதல் மனைவி நான் என்பதால் நீதிமன்றத்தில் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்.

3. தாவாவில் எனக்கும் நவகோட்டிக்கும் எப்போது திருமணமானது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த விலாசத்தில் திருமணமானது என்ற விவரத்தையும் சொல்லவில்லை என்றால் சரிதான். பரிகாரத்தில் மணியம்மாள், ராஜ்குமார், ரமேஷ் ஆகியோர் நவகோட்டியின் வாரிசு என சான்று கேட்டுள்ளேன். யாருக்கு எதிராக வழக்கு போட்டுள்ளேன் என்றால் 2வது மனைவியான விஜியா, ரவி (எ) ராஜேந்திரன் மற்றும் அபிராமி ஆகியோர் மீது மட்டும் வழக்கு போட்டுள்ளேன்.

4. விஜியா, ராஜேந்திரன் மற்றும் அபிராமியையும் சேர்த்து வாரிசு சான்று கேட்டுள்ளேனா என்றால் ஆமாம். இந்த வழக்கில் விஜியா, ராஜேந்திரன் மற்றும் அபிராமி என்ன பதில் போட்டுள்ளார்கள் என்று தெரியாது. விஜியா மற்றும் நவகோட்டிக்கு எப்போது திருமணமானது என்ற விவரம் தெரியாது. பதிலில் திருமணமான தேதி சொல்லியுள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

5. தாசில்தார் தாவாவில் என்ன பதில் போட்டுள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இரண்டு பிரமாண வாக்குமூலங்களில் உள்ள சங்கதிகள் தெரியும். நவகோட்டி மற்றும் விஜயாவிற்கு பிள்ளைகள் உள்ளது பற்றி தெரியுமா என்றால் இன்றையிலிருந்து சுமார் 30 வருடத்திற்கு முன்பு தெரியும். எனக்கும் நவகோட்டிக்கும் எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் 1970–ல். இந்த விவரத்தை தாவாவில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை.

6. எனது தாவாவில் 1985–ல் நவகோட்டி இறந்ததாக சொல்லியுள்ளேன் எங்களுக்கு எப்போது திருமணம் நடந்தது என குறிப்பிடாத நிலையில் வட்டாட்சியரால் உரிய முறையில் எனது மனுவை விசாரிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. தாவாவில் 1985 இறந்ததாக சொல்லிவிட்டு பிரமாண வாக்குமூலத்தில் மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல, மாற்றி சொல்லவில்லை 18.10.2016–ல் தான் இறந்தார்.

7. 1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் அவருக்கும் நவகோட்டிக்கும் 10.09.1973–ல் திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளது தெரிந்து தற்போது எனக்கும் நவகோட்டிக்கும் 1970–ல் திருமணம் நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பொறுத்து எனக்கும் நவகோட்டிக்கும் எந்த தேதியில் திருமணமானது என இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களின் படியும் யார் முதல் மனைவி என தீர்மானிக்க முடியாது என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்த தாவாவிலும் முதல் பிரமாண வாக்குமூலத்திலும் எனக்கும் நவகோட்டிக்கும் எப்போது திருமணம் நடந்தது என தெரிவிக்காமல் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவாப்படி நவகோட்டி இறந்து சுமார் 33 ஆண்டுகள் கழித்து வாரிசு சான்று கேட்டு மனு செய்ததால் வட்டாட்சியரால் சரியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாவாவில் நவகோட்டியின் பெற்றோர் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. உண்மை தன்மையை மறைத்து தாவா மற்றும் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளதால் எனது தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.